


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மார்ச் 1, 2018 | புரட்சி 17 | முழக்கம் 07 | விலை: ரூ.3.00


## அய்.அய்.டி.யில் சமஸ்கிருதத்தில் கடவுள் வாழ்த்தா?

சென்னை அய்.அய்.டி.யில் மத்திய அமைச்சர்கள் நித்தின் கட்காரி, பொன். இராதா கிருஷ்ணன் பங்கேற்ற விழாவில், ‘மகாகணபதி’ என்ற சமஸ்கிருதப் பாடல் இறை வாழ்த்துப் பாடலாக பாடப்பட் டுள்ளது. வழக்கமாக அரசு விழாவில் பாட வேண்டிய தமிழ்த் தாய் வாழ்த்து புறக்கணிக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தைவிட மூத்த மொழி தமிழ் என்று அண்மையில் மோடி அளித்த ஒரு பேட்டிக்காக மோடிக்கு பாராட்டு மாலைகளைத் தூக்கிக் கொண்டு ஒரு அணியே நீண்ட வரிசையில் நின்றது. இப்போது மோடி ஆட்சியின் உண்மையான முகம் ஒரு வாரத்துக் குள்ளேயே கிழிந்து தொங்குகிறது.

மாணவர்கள் தாமாகவே முன் வந்து சமஸ்கிருதப் பாடல்களைப் பாடினார்கள் என்று அய்.அய்.டி. இயக்குனரான பாஸ்கர் இராமமூர்த்தி விளக்கமளித்திருக்கிறார். மாணவர்கள் தாமாக முன் வந்து தான் அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்தைத் தொடங்கினார்கள். அதை மட்டும் ‘இராம மூர்த்திகள்’ தடை செய்தது ஏன்?

மாணவர்கள் தாமாகவே முன் வந்து அய்.அய்.டி. வளாகத்தில் மாட்டுக்கறி விருந்து நடத்தினால் இந்த இராமமூர்த்திகள் அனுமதித்து விடுவார்களா?

அய்.அய்.டி.யில் சமஸ்கிருதத்தை ஒரு விருப்பப் பாடமாக்க வேண்டும் என்பது மோடி ஆட்சியின் கொள்கை. அய்.அய்.டி.யில் கற்பிக்கப்படும் அறிவியல் தொழில்நுட்பப் பாடங்களை சரியாகப் புரிந்து கொள்வதற்கு சமஸ்கிருதம் கற்பது பெரும் உதவியாக இருக்கும் என்று மத்திய அமைச்சரே கூறியிருந்தார். அந்த வழியில் தான் ‘சமஸ்கிருதம்’ இப்போது பாடப்பட்டிருக்கிறது.

“கணபதி” தாமாகவே முன் வந்து, “பாஸ்கர், பாஸ்கர், சமஸ்கிருதத்திலேயே என்னை வாழ்த்திப் பாடு; உனக்கு பதவி நீட்டிப்புக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்” என்று என்னிடம கேட்டார். அது கணபதியின் நேயர் விருப்பம்’ என்று பாஸ்கர் இராமமூர்த்திகள் விளக்கங்களைக் கூறாமல், காதில் பூ சுற்றும் வேலைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

# மருத்துவ மாணவர்களின் மர்ம மரணங்களுக்குக் காரணம் யார்?

சண்டிகாரில் உள்ள பி.ஜி.அய்.எம்.இ.ஆர் – மத்திய அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மேல் பட்டப் படிப்பில் முதலாம் ஆண்டில் சேர்ந்த கிருஷ்ண பிரசாத் என்ற தமிழ்நாட்டு மாணவர் விடுதியில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

டெல்லி பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் யு.சி.எம்.எஸ். மருத்துவக் கல்லூரியில் முதுநிலை மருத்துவம் பயின்றுவந்த தமிழக மாணவர் சரத்பிரபுவின் மர்ம மரணம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. 2016-ல் டெல்லி எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் படித்துவந்த தமிழக மருத்துவ மாணவர் சரவணன் மர்ம மரணம் ஏற்படுத்திய அதிர்ச்சி விலகாத நிலையில் நடந்திருக்கும் மற்றொரு சம்பவம் இது.

சரவணன் போலவே சரத்பிரபுவும் விஷ ஊசி செலுத்தப்பட்டே இறந்திருக்கிறார். சரவணன் மரணத்தைப் பொறுத்தவரை, அது ஒரு தற்கொலை என்றே எய்ம்ஸ் நிர்வாகமும், டெல்லி காவல் துறையும் சொல்லிவந்தன. ஆனால் பிரேத பரிசோதனை முடிவுகள், அது தற்கொலை அல்ல என்பதை உறுதிப்படுத்தின. இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது வேறு விஷயம்!

சில நாட்களுக்கு முன்பு, குஜராத்தின் அகமதாபாதில் உள்ள பி.ஜே. மருத்துவக் கல்லூரியில் முதுநிலை மருத்துவம் பயிலும் தமிழக மாணவர் மாரிராஜ் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றார். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தன்னை சக மாணவர்களும் பேராசிரியர்களும் சாதீய ரீதியாக இழிவுபடுத்தியதாலேயே அப்படி ஒரு முடிவுக்குச் செல்ல நேர்ந்ததாக மாரிராஜ் கூறியிருக்கிறார்.

சாதி, மதம், தேசிய இனம், மொழி போன்றவற்றின் அடிப்படையில் காட்டப்படும் பல்வேறு பாகுபாடுகள் இந்தச் சம்பவங்களுக்குக் காரணமாக அமைகின்றன. சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பின்மை, இளம் தலைமுறையிடம் அச்சத்தையும் கவலையையும் உருவாக்கியிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபக்கம், வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய ஒருசில உயர் படிப்புகளுக்கு நிலவும் கடும் போட்டி மறுபக்கம் என்று பெரும் சவால்களை அவர்கள் எதிர்கொள்ள நேர்கிறது. அனைவருக்கும் உயர்கல்வி வாய்ப்புகள் கிட்டாமை, கல்விக் கட்டணங்கள் அதிகரித்திருப்பது உள்ளிட்டவை பிற காரணங்கள். இந்நிலையில், மாநிலங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வான உயர்கல்வி வாய்ப்புகள், வட மாநிலங்களில் போதிய மருத்துவக் கல்லூரிகள், மருத்துவ இடங்கள் இல்லாதது ஆகிய காரணிகள் மாணவர்களிடையேயான நல்லுறவைப் பாதித்திருப்பது மிக முக்கியமான பிரச்சினை.

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் முதுநிலை மருத்துவ இடங்கள் ரூ.2 கோடி வரை விலை போகின்றன. இதன் காரணமாக, அரசுக் கல்லூரிகளுக்கு மாணவர்களிடையே கடும் போட்டி நிலவுகிறது. இதில் கவனிக்க வேண்டிய விஷயம், ஒரு மாணவர் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அவரது இடம் மரணம் போன்ற காரணங்களால் காலியாகிவிட்டால், வேறு ஒரு மாணவர் அவரது இடத்தில் சேர முடியும் என்பதுதான். வேறு மருத்துவக் கல்லூரியிலிருந்து இடமாறுதல் பெற்றும் அவரது இடத்துக்கு வர முடியும். வெளி மாநிலங்களில் பயின்றுவரும் தமிழக மாணவர்களின் மரணங்களை இந்தப் பின்னணியில் பார்ப்பது அவசியம்.

வட மாநிலங்களில் மருத்துவ இடங்கள் குறைவாக இருக்கின்றன. அந்த இடங்களில், தமிழக மாணவர்கள் சேரக் கூடாது என்பதற்காக பல்வேறு பாகுபாடுகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். உண்மையில், தமிழக மாணவர்கள் வேறு மாநிலங்களில் சேர்ந்து படிக்க வேண்டிய நிலையை உருவாக்கியது இந்திய மருத்துவக் கழகமும் மத்திய, மாநில அரசுகளும்தான் என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

தமிழகத்தில் உள்ள முதுநிலை மருத்துவ இடங்களில் 50%-ஐ அகில இந்தியத் தொகுப்புக்கு மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது. மீதி உள்ள இடங்களில் 50%-ஐ அரசு மருத்துவர்களும், 50%-ஐ அரசுப் பணியில் இல்லாத மருத்துவர்களும் பெற்றுவந்தனர். இந்நிலையில் சென்ற ஆண்டு, இந்திய மருத்துவக் கழகத்தின் புதிய விதிமுறையின்படி, அரசு மருத்துவர்களுக்கான 50% (அதாவது மொத்த இடங்களில் 25%) இடஒதுக்கீடு ரத்துசெய்யப்பட்டது. அதற்குப் பதிலாக, தொலைதூர மற்றும் கடினமான பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 10% என்ற அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு 30% மதிப்பெண்ணை, அவர்கள் பெற்ற நீட் தேர்வு மதிப்பெண்ணுடன் சேர்த்துக்கொள்ளலாம் என விதிமுறை உருவாக்கப்பட்டது.

இதன் விளைவாக, பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு முதுநிலை மருத்துவப் படிப்பு கிடைக்காத நிலை ஏற்பட்டது. மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான, தொலைதூர மற்றும் கடினமான பகுதிகளைச் சேர்ந்த மருத்துவர்கள் மட்டுமே முதுநிலை மருத்துவப் படிப்பில் சேரும் சூழல் உருவானது. இதனால், தமிழக அரசு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களையும் பெரும்பாலான அரசு மருத்துவ மனைகளையும் கடினமான பகுதி மருத்துவமனைகள் பட்டியலில் இணைத்தது. இதன் காரணமாக 95% -க்கும் மேற்பட்ட முதுநிலை மருத்துவ இடங்கள் அரசு மருத்துவர்களுக்கே கிடைத்தன. இது அரசுப் பணியில் இல்லாத மருத்துவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. நீட் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்ற சரத்பிரபு போன்றோர் வெளி மாநிலங்களில் சேர்ந்து படிக்க வேண்டிய கட்டாயம் உருவானது இப்படித்தான்.

முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கையில் ஏற்கனவே இருந்த நடைமுறை தமிழகத்தில் பின்பற்றப்படுவது, தமிழகத்தில் உள்ள அனைத்து இளநிலை, முதுநிலை, உயர் சிறப்பு மருத்துவ இடங்களையும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கே வழங்க நடவடிக்கை எடுப்பது ஆகியவை அவசியமானவை. ஆந்திரம், தெலங்கானா மாநிலங்களில் உள்ள மருத்துவ இடங்கள் அனைத்தும் அந்த மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. அவர்கள் அகில இந்தியத் தொகுப்புக்கு இடங்களை வழங்கவும் மாட்டார்கள், பெறவும் மாட்டார்கள். 1974இல் கொண்டுவரப்பட்ட 32ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி, 371-டி என்ற பிரிவு சேர்க்கப்பட்டது. இதன்மூலம்தான் அந்த மாநிலங்களின் மாணவர்கள் இத்தகைய பலன்களைப் பெறுகிறார்கள். அத்தகைய சட்டப் பாதுகாப்பை நாமும் பெற வேண்டும். தனியார் மருத்துவக் கல்லூரிகளும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் மத்திய அரசின் கல்வி நிறுவனங்களும் அவை அமைந்துள்ள மாநிலத்துக்கு 65% இடங்களை வழங்குவது பல பிரச்சினைகளைத் தீர்க்கும்.

வெளிமாநிலங்களுக்குப் படிக்கச் செல்லும் தமிழக மாணவர்களுக்கு உதவும் வகையில் தனித் துறை ஒன்றை அரசு உருவாக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கு உதவி மையங்களை அனைத்துக் கல்லூரிகளிலும் உருவாக்குவது அவசியம். சாதியப் பாகுபாடு தொடர்பான புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பது அசம்பாவிதங்களைத் தவிர்க்கும். மிக முக்கியமாக, மருத்துவ மாணவர்கள் மர்மமான முறையில் இறந்தால், அவர்களது இடத்தில் வேறு மாணவர்கள் சேர அனுமதிக்கக் கூடாது. சில இடங்களில் பேராசிரியர்களே மாணவர்களை ‘ராகிங்’ செய்யும் கொடுமை நடப்பதை அறிய முடிகிறது. இந்த அவலங்கள் தொடர அனுமதிக்கக் கூடாது. விடுதி வசதிகளை மேம்படுத்தி, பாதுகாப்பையும் அதிகரிக்க வேண்டும்.

மருத்துவ மாணவர்களுக்கு ஏற்படும் உடல்ரீதியான, மனரீதியான உளைச்சல்களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்துக் கல்லூரிகளிலும் மனநல ஆலோசனை மையங்களை உருவாக்கலாம். அவர்களது பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தலாம். விளையாட்டு, கலை, கலாச்சார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். அனைவருக்கும் இலவசக் கல்வியையும், வேலைவாய்ப்பையும் உறுதிசெய்ய வேண்டும். அதுவே, மாணவர்களின் மர்ம மரணங்களைத் தடுத்து நிறுத்தும் அரணாக அமையும்!

**– ஜி.ஆர்.இரவீந்திரநாத்**
**பொதுச் செயலாளர்**
**சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம்**

**அரசே! குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடு!**

# விழுப்புரத்தில் தலைவிரித்தாடும் ஜாதி வன்கொடுமை

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்துக்குட்பட்ட கிராமங்களில் தலித் குடும்பங்கள் மீதான கொலை வெறித் தாக்குதல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், ஜாதி ஆதிக்கச் சக்திகளால் தொடர்ந்து நடப்பது அதிகரித்து வருகிறது. வழக்கம்போல காவல்துறை தலித் மக்கள் மீதான தாக்குதல் என்றால் அலட்சியம் காட்டுவது போலவே இதிலும் செயல்பட்டு வருகிறது.

தற்போது திருக்கோவிலூர் அருகே உள்ள வெள்ளம்புத்தூர் கிராமத்தில் வசித்து வந்த தலித் குடும்பத்தைச் சார்ந்த ஆராயி (4), அவரது மகள் தனம் (15), மகன் சமையன் (10) ஆகியோர் மீது மர்ம நபர்கள் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். சிறுவன் சமையன் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துவிட்டார். உயிருக்குப் போராடிய நிலையில் ஆராயியையும் அவரது மகள் தனத்தையும் முதலில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சேர்த்து, அங்கு பிராணவாயு (ஆக்ஸிஜன்) இல்லாததால், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

தாழ்த்தப்பட்டோர் ஆணைய துணைத் தலைவர் முருகேசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் வெள்ளம் புத்தூர் கிராமத்துக்குச் சென்று ஆய்வு நடத்தியுள்ளனர்.

இதே விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம், அத்தியூர் திருக்கை கிராமத்தில் மற்றொரு ஜாதிவெறித் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இதே கிராமத்தில் இரு வேறு சமூகத்தைச் சார்ந்த இளைஞரும் இளம் பெண்ணும் காதலித்து திருமணம் செய்யும் நோக்கத்தோடு ஊரை விட்டு சென்றுள்ளனர். பெண்ணின் வீட்டார் தேடிச் சென்று பெண்ணை காதலனிடமிருந்து கட்டாயப்படுத்திப் பிரித்து, அழைத்து வந்துவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து, பெண்ணின் ஜாதியைச் சார்ந்த 200 பேர் பயங்கர ஆயுதத்துடன், தலித் குடியிருப்புகளுக்குள் புகுந்து, 60க்கும் மேற்பட்ட தலித் குடும்பங்களைத் தாக்கி, பல இலட்சம் மதிப்புள்ள உடைமைகளை அழித்துவிட்டனர். பாதிக்கப்பட்ட தலித் குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழந்து ஊரைவிட்டே வெளியேறியுள்ளனர்.

ஊடகங்களில் இத்தகைய தலித் மீதான வன்கொடுமைகளுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. தொலைக்காட்சி ஊடகங்களிலும் விவாதங்கள் நடப்பது இல்லை.

வழமைக்கு மாறாக பா.ம.க. இளைஞரணி தலைவர் அன்புமணி, வெள்ளம்புதூர் தாக்குதலுக்கும் தலித் சிறுவன் படுகொலைக்கும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். 'வதந்திகளைப் பரப்பக் கூடாது' என்றும், புதுடில்லி, விழுப்புரம், தூத்துக்குடி மற்றும் போரூரில் தலித்துகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் போலவே இந்தத் தாக்குதலும் நடந்திருக்கிறது என்றும் ஒப்புமை காட்டியிருக்கிறார்.

எப்படி இருப்பினும் உண்மையான குற்றவாளிகளை காவல்துறை கண்டுபிடித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட தலித் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையமும் இதை வலியுறுத்தியிருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ்நாட்டில் தலித் மக்கள் மீதான ஜாதி வெறித் தாக்குதல், வன்கொடுமைகள் முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே இருப்பதை தமிழக அரசியல் கட்சிகளும் 'வாக்கு வங்கிக்' கண்ணோட்டத்தோடு கண்டிக்காமல் ஒதுங்கியே நிற்பது கண்டனத்துக்குரியது.

'இந்து' ஒற்றுமைப் பேசும் மதவாத கட்சிகளானாலும், தமிழர் என்றால் யார் என்பதற்கு 'ஆக்ஸ்போர்டு அகராதி' போடும் அமைப்புகளும், ஜாதி வெறித் தமிழர்களைக் கண்டிக்க முன்வருவதில்லை. அவர்கள் மவுனத்தைக் களைய வேண்டும்.

திராவிடர் விடுதலைக் கழகம் தலித் மக்கள் மீதான இந்த ஜாதி வெறித் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறது.

# கமலஹாசனின் 'மய்யம்'

மக்களுக்கு நீதி கேட்கும் மய்யத்தோடு மதுரையில் களமிறங்கியிருக்கிறார் நடிகர் கமலஹாசன். கட்சித் தொடங்கும் உரிமை அவருக்கு உண்டு. எதிர்காலத்தில் அவரின் செயல்திட்டங்களே வெற்றி தோல்விகளை தீர்மானிக்கும். அவரது 'நிலைப்பாடுகள்' மற்றும் கொள்கை திசை வழி இனிமேல்தான் தெரியும்.

ஆனாலும், "நான் இடது சாரியுமல்ல; வலதுசாரியுமல்ல; இரண்டுக்கும் 'மய்யமானவன்' என்று அவர் தன்னை அடையாளப் படுத்தியிருக்கிறார்.

தத்துவங்களில் 'மய்யம்' என்பது வேறு; நிகழ்வுகளில் 'மய்ய' நிலைப்பாடு எடுப்பது என்பது வேறு. இரண்டுக்குமிடையிலான குழப்பத்தில் கமலஹாசன் மூழ்கியிருப்பதாகவே தெரிகிறது. காஞ்சி சங்கராச்சாரி, தமிழ்த் தாய் வாழ்த்துக்கு ஏன் மரியாதை காட்டவில்லை என்ற கேள்விக்கு சங்கராச்சாரி அப்படி செய்திருக்கக் கூடாது என்றோ, எழுந்து நிற்காதது அவரது உரிமை என்றோ கூறவில்லை. கமலகாசனின் 'மய்ய'மான கருத்து, 'கண்ட கண்ட இடங்களில் தமிழ்த் தாய் வாழ்த்துகளைப் பாடக் கூடாது' என்பதாகவே இருந்தது.

ஆண்டாள் தேவதாசி மரபில் வந்திருக்கலாம் என்று பேசிய கவிஞர் வைரமுத்துக்கு ஜீயர்கள், வைணவப் பார்ப்பனர்களிடமிருந்தும், மதவாத அமைப்புகளிடமிருந்தும் கண்டனம், மிரட்டல்கள் வந்தபோது, 'கமலஹாசனின்' மய்யம் வைரமுத்துக்கு எதிராகவே இருந்தது. 'அவர் ஆண்டாளைப் பற்றி பேசி இருக்கத் தேவையில்லை' என்றார். விமர்சனம் கருத்துரிமை அனைவருக்குமே உண்டு என்று அவர் மய்யமாக நிற்காமல், ஆண்டாளுக்காகவும், அய்யங்கார்களுக்காகவும் அவர் மய்யம் சாய்ந்தது.

மதுரை தொடக்க விழாவை முடித்துவிட்டு அடுத்த நாள் சென்னைக்குப் புறப்பட இருந்த கமலஹாசன், செய்தியாளர்களிடம் பேசுகையில், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்பு இருப்பதைக் குறிப்பிட்டார். முதல் நாள் கட்சியை அறிவித்து, அடுத்த நாளே அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் அழைப்புக்காகக் காத்திருந்தவருக்கு கிடைத்தது ஏமாற்றம். ஒருவேளை அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தால், பிரதமரை நேரில் சந்திக்கும் முடிவை அனைத்துக் கட்சிகளும் எடுத்திருப்பதை கட்டாயம் வரவேற்றிருப்பார். ஆனால், அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்காத நிலையில், 'அனைத்துக் கட்சிக் கூட்டத்தினால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை' என்ற 'மய்யமான' கருத்தை வெளியிட்டார்.

காந்தி, பெரியார், அம்பேத்கர், காமராசர் ஆகியோரே தனக்குப் பிடித்த தலைவர்கள் என்று கூறி வந்த கமலஹாசன், மதுரைக் கூட்டத்தில் இது குறித்து ரசிகரிடமிருந்து வந்த கேள்விக்கு, பெரியார் பெயரை மட்டுமே திட்டமிட்டு உச்சரிக்காமல், நேரு, பிரனாய் விஜயன், ஒபாமாவும் தனக்குப் பிடித்த தலைவர்கள் தான் என்று கூறி தனது 'மய்ய'த்தை பெரியாரைத் தவிர்க்க வேண்டும் என்ற 'சூட்சமத்தோடு' இணைத்துக் கொண்டார்.

"அப்துல்கலாம் நினைவிடத்திலிருந்து கட்சிப் பயணத்தைத் தொடங்கும் நீங்கள் ஏன், கலாம் மறைவுக்கு வரவில்லை என்ற கேள்விக்கு, எந்த மரண நிகழ்ச்சிகளிலும் தான் பங்கேற்பதில்லை என்ற ஒரு கொள்கை முடிவை பதிலாகக் கூறினார். சிவாஜி கணேசன் மறைவில், அவரது சடலத்துடனேயே இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றதைப் படங்களுடன் முகநூலில் வெளியிடப்பட்டபோது கமலஹாசன் 'மய்யம்' - இங்கே 'கமுக்கான மவுனத்துடன்' இணைந்து கொண்டது. இப்போது மய்யமே - ஸ்ரீதேவி உடலுக்கு மலர்வளையம் வைக்க பம்பாய்க்கு பறந்திருக்கிறது.

தமிழக ஆட்சிகளை விமர்சிக்கும் நீங்கள், ஏன் மத்திய ஆட்சி பற்றி எதுவுமே பேசவில்லை என்று கேட்டால், "மத்திய ஆட்சி, என்ற ஒன்று டெல்லியில் மட்டுமே இருக்கக் கூடாது. நாடு முழுதும் மத்திய ஆட்சிகள் நாடாளுமன்றங்களை விரிவுபடுத்த வேண்டும்" என்று மய்யமான யோசனையைக்கூட அவர் முன் மொழியக் கூடும்.

"உங்களை பகுத்தறிவுவாதி என்று கூறி வந்தீர்கள். அந்தக் கொள்கையை இனியும் பின்பற்றுவீர்களா?" என்று கேட்டால், "பகுத்தறிவு - பகுத்தறிவாளர்களிடம் மட்டும்தான் இருக்கிறதா? சோதிடம், சகுனம் பார்ப்பதிலும் இருக்கிறது. காவடி தூக்குவது, மொட்டை அடிப்பதிலும் பகுத்தறிவு இருக்கிறது. ஏன் பகுத்தறிவு வாதங்களை கடுமையாக எதிர்ப்போரிடம்கூட பகுத்தறிவு இருக்கிறது; நாங்கள் இரண்டுக்குமிடையே மய்யத்தில் இருக்கிறோம் என்று விளக்கம் கூறினாலும் வியப்பதற்கு இல்லை.

தலித் மக்கள் மீது தாக்குதல் நடக்கிறதே என்று கேட்டால், அதற்கு - அரிவாள், பட்டாக்கத்திகளைத் தடை செய்ய வேண்டும் என்ற மய்ய சிந்தனைக்கு வரலாம்.

கமலஹாசனின் மய்யம் இனி எத்தனை எத்தனை வடிவங்களை எடுக்கப் போகிறதோ தெரியவில்லை.

ஆக, கமலஹாசனின் 'மய்யம்', மய்யங்களுக்குள்ளேயே மய்யத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது.

மக்களையாவது விளிம்புக்குத் தள்ளி விடாமல் இருக்குமா, இந்த மய்யம்?

**– கோடங்குடி மாரிமுத்து**

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் பேச்சு (4)

# சங்கராச்சாரிகள் கர்ப்பகிரகத்துக்குள் நுழைவதே வேத மரபுக்கு எதிரானதுதான்!

*‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையிலிருந்து... (கடந்த வார தொடர்ச்சி)*

ஆண்டாள் தேவதாசி மரபில் வந்தவராக இருக்கலாம் என்று கூறியதற்கே ஆண்டாளை அவமதித்து விட்டதாக துள்ளிக் குதிக்கும் ஜீயர் - வைணவப் பார்ப்பனர்களுக்கு அவர்களின் வேதமரபு குறித்து சிலவற்றைக் குறிப்பிட்டாக வேண்டும். இதையெல்லாம் அவர்கள் பேச வைத்து விட்டார்கள். பெரியார் இயக்கத்தவர்களாகிய நாங்கள். அந்த ‘ஆபாசங்களை’ எல்லாம் இனியும் பேச வேண்டிய அவசியமில்லை என்று கடந்து போய்விட்டோம். ஆனால் எங்களை மீண்டும் வேத மரபின் வண்டவாளங்களைப் பேச வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை அவர்களே உருவாக்கியிருக்கிறார்கள்.

வேதங்கள் நான்கு. அய்ந்தாவதாக ஒரு வேதம் உண்டு. அதை ‘விவேக சாகரம்’ என்று கூறுகிறார்கள். அந்த ‘விவேக சாகரம்’ என்றால் என்ன என்பதை வைதீகத்தில் ஊறிப் போன ‘கலைமகள்’ பத்திரிகையின் ஆசிரியராக இருந்த கி.வா.ஜகந்நாதன் என்ற பார்ப்பனர் விளக்கமாக எழுதியிருக்கிறார். அவர் எழுதியதை அப்படியே படிக்கிறேன்.

“ஒரு ‘பிராமணன்’ நான்கு வேதங்களும் கற்றுக் கொள்கிறான். இடையில் அவனுக்குக் கல்யாணம் ஆகிறது. வேதங்களை அத்தியானம் செய்துவிட்டு வீட்டுக்கு வருகிறான். மனைவியோடு வாழலாம் என்று வருகிறான். அவன் மனைவி ஒரு கள்ளப் புருஷனை வைத்துக் கொண்டிருக்கிறாள். தன் கணவனிடம் நான்கு வேதம்தானே கற்றிருக்கிறீர்கள். அய்ந்தாம் வேதம் கற்றுக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி அனுப்பி விடுகிறாள்.

அந்த அப்பாவி ‘பிராமணனும்’ அதை உண்மை என்று நம்பி புறப்பட்டு விடுகிறான். சில பெண்களைச் சந்தித்தான். அய்ந்தாம் வேதம் கற்றுக் கொள்வதற்கு வந்திருப்பதாகவும், அதற்குரிய குருவைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் சொன்னான். அந்தப் பெண்கள் தாங்களே அய்ந்தாம் வேதத்தைக் கற்றுத் தருவதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொருத்தியும் வெவ்வேறு வகையான தந்திரம் செய்து, தன் கணவன் இருக்கும்போதே அந்த ‘பிராமணனோடு’ இன்புறுகிறார்கள். இதுதான் அய்ந்தாம் வேதம் என்கிறார்கள். இப்படி அய்ந்து பேர் அய்ந்து வகையில் அவருக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். இடையில் வருபவை எல்லாம் பச்சையானச் செய்திகள். இந்தக் கதையைச் சொல்வதுதான் ‘விவேக சாகரம்’ - இதற்கு தமிழில் அறிவுக்கடல்” என்கிறார் கி.வா.ஜகந்நாதன். அது மட்டுமல்ல;

“அந்தப் பிராமணன் கற்றுக் கொண்ட விவேகம் முறையற்ற காமலீலையால்! இப்போது மட்டும் அந்தப் புத்தகத்தை வெளியிட அரசு அனுமதிக்குமானால் ஒரே நாளில் இலட்சம் பிரதிகள் செலவாகிவிடும்” என்று குறிப்பிட்டுள்ளார். (ஆதாரம் கி.வா.ஜ. எழுதிய ‘புது டைரி’)

இந்த அடிப்படையிலேயே ஒரு கணவருக்கு 5 மனைவியரைக் கொண்ட கதையான மகாபாரதத்தையும், 5ஆம் வேதம் என்று கூறுகிறார்கள்.

ஆண்டாளுக்காக ஜீயர்களும், வைணவப் பார்ப்பனர்களும்தான் வீதிக்கு வந்தார்களே தவிர, தீவிரமான சைவப் பார்ப்பனர்கள் வீதிக்கு வந்து போராடவில்லை. பார்ப்பனக் கோடரி காம்புகளாகி விட்ட ‘சூத்திர’ இந்து மக்கள் கட்சிகள்தான் கூப்பாடு போட்டன. சங்கராச்சாரிகள், ஸ்மார்த்தப் பார்ப்பனர்கள், இவர்களுக்கு வேத மரபுப்படி கோயில் சடங்குகளை செய்யவோ கோயில் கர்ப்ப கிரகத்தில் நுழையவோகூட உரிமை கிடையாது. வேதத்தை மட்டுமே கடவுளாகக் கொண்டவர்கள் ஸ்மார்த்தப் பார்ப்பனர்கள்.

திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலின் கர்ப்பகிரகத்துக்குள் சீனியர் சங்கராச்சாரி நுழைய முயன்றபோது அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலியில் சிவன் கோயிலுக்கு திருப்பணிகளைத் தொடங்கி வைக்க காஞ்சிஜெயேந்திரன் வர இருந்த நிலையில் அதற்கு ஸ்மார்த்த பார்ப்பனருக்கு உரிமை இல்லை என்று சைவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். “ஆகம வழி நடத்தப்படும் கோயில்களை ‘இந்து’ என்ற போர்வையில் ஸ்மார்த்தர்கள் (ஸ்மிருதிகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு ஆகமங்களைப் புறந்தள்ளிவிட்டு, தனியொரு கடவுளின் இருப்பினை ஏற்றுக் கொள்ளாத பரமார்த்தில் மறைமுக நாத்திக வழியான) சங்கராச்சாரியிடம் பறி கொடுக்க மாட்டோம்” என்பதே சைவர்கள் தொடர்ந்த வழக்கு. சங்கராச்சாரி எதிர் வழக்காடாமல் அப்படியே ஒதுங்கிக் கொண்டார். சங்கராச்சாரி கர்ப்பகிரகத் துக்குள்ளே நுழைவதும் சிவன் கோயில் திருப்பணிகளை செய்வதும் ஆகமத்துக்கு எதிரானது என்று தீவிர சைவர்கள் கூறினாலும் பார்ப்பனர்கள் ஆகம மீறல்களை அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே பார்ப்பனர்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட உரிய பயிற்சிப் பெற்ற அர்ச்சகர்கள், கர்ப்பகிரகத்தில் நுழைந்து பூஜை நடத்துவது மட்டுமே ஆகமமீறல்கள் என்கிறார்கள். பார்ப்பன வேத மரபு சைவ-வைணவ மரபுகளை எல்லாம் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ‘இந்து’ என்று பெயர் சூட்டிக் கொண்டு விட்டார்கள்.

சங்கராச்சாரி ஸ்மார்த்த பார்ப்பனர்களுக்கு எதிராக வைணவப் பார்ப்பனர்களும் போர்க்கொடி உயர்த்தி வந்திருக்கிறார்கள். வைணவர்களுக்காகவே ‘ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனம்’ என்ற பத்திரிகையை திருச்சி புத்தூர் அக்கிரகாரத்தைச் சார்ந்த எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் என்ற பார்ப்பனர் நடத்தி வந்தார். அவர் ஒரு வழக்கறிஞர். ‘ஸ்ரீ ராமானுஜ மிஷன் ஸ்ரீ வைஷ்ணவ சபை’ என்ற அமைப்பின் தலைவர். இந்தப் பத்திரிகை ஸ்மார்த்த பார்ப்பனரான மூத்த சங்கராச்சாரி வைதீக மரபுகளை மீறி செயல்பட்டு வருவதைத் தொடர்ந்து அம்பலப்படுத்தியது. காமகோடி சந்திரசேகரேந்திர சரசுவதி பத்திரிகையாளர்களையும், திரைப்படக்காரர்களையும் வளைத்துப் போடும் இராஜதந்திரி என்று அவர் சீனியர் சங்கராச்சாரி பற்றி எழுதியிருக்கிறார்.

> “காமகோடி பெரிய பீடாதிபதி பெரிய இராஜ தந்திரி. பொது ஜன பத்திரிகை நிர்வாகிகளையும், சினிமாக்காரர்களையும், அரசியல்வாதிகளையும் நீண்ட நாளாகவே தம் வசப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஒரு பிரபல வாரப் பத்திரிகையின் பிராமண நிர்வாகி, ஒரு பிரபல பாடகியை அநுலோப விவாஹம் செய்து கொண்டவராகையால், சிருங்கேரி பீடாதிபதி அவர்களுடைய பாத பூஜையை ஏற்க மறுத்துவிட்டார். காஞ்சி காமகோடிப் பெரியவர் அவர்களுடைய பாத பூஜையை ஏற்றுக் கொண்டு இன்றும் அப்பத்திரிகையின் பேராதரவைப் பெற்று நிற்கிறார்” என்று எழுதினார்.

அய்யங்கார் குறிப்பிடும் பிரபல வாரப் பத்திரிகையின் நிர்வாகி கல்கி சதாசிவம் அய்யர்தான். அவர் திருமணம் செய்து கொண்ட பெண் பிரபல பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமிதான், வேறு யாரும் அல்ல. உயர்ஜாதி பார்ப்பனர்கள், ‘கீழ் ஜாதி’ சுப்புலட்சுமியை திருமணம் செய்து கொண்டதால் இதற்கு வேத மரபு ‘அநுலோப விவாஹம்’ என்று பெயர் சூட்டியிருக்கிறது. வேத மரபுப்படி இந்தத் திருமணம் முறைகேடானது. எனவே, இந்த தம்பதிகளுக்கு பூரி சங்கராச்சாரி ஆசீர்வாதம் வழங்க மறுத்து விட்டார். ஆனால் காஞ்சி சீனியர் சங்கராச்சாரி, கல்கி பத்திரிகையின் ஆதரவு வேண்டும் என்பதற்காக இந்தத் தம்பதியினரை ஆசீர்வதித்தார். சங்கராச்சாரி பார்ப்பனர்களுக்கு சாஸ்திரத்தைவிட பத்திரிகையின் செல்வாக்கு முக்கியம் என்கிறார் கிருஷ்ணசாமி அய்யங்கார். எம்.எஸ். சுப்புலட்சுமி, தன்னை தீவிரப் பார்ப்பனராகவே அடையாளம் காட்டிக் கொண்டார். தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை கலைஞர் முதல்வராக இருந்தபோது எம்.எஸ். சுப்புலட்சுமியிடம் பாடித் தருமாறு கேட்டபோது பாட மறுத்தவர்தான் எம்.எஸ். சுப்புலட்சுமி. சுப்புலட்சுமி தேவதாசி மரபில் வந்தவர்.

அதே போன்று சங்கராச்சாரியால் தனது ஆதரவு வலைக்குள் இழுத்துப் போடப்பட்டவர்தான் திரைப்படப் பாடல்களில் நட்சத்திரமாக விளங்கிய கண்ணதாசன். கண்ணதாசன், கவிஞர், திரைப்படப் பாடல் எழுதக் கூடிய திறமைப் பெற்றவர். ஆனால், நாவல் எழுத்தாளர் என்று கூற முடியாது. அவரது நாவல் ஒன்றுக்கு டெல்லி அரசின் சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. இந்த விருது எப்படி கிடைத்தது? அதற்குரிய தகுதி அந்த நாவலுக்கு உண்டா? இதை கிருஷ்ணசாமி அய்யங்கார் தனது பத்திரிகையில் அம்பலப்படுத்தினார். சங்கராச்சாரியின் ஆலோசனைப்படி குலசேகர ஆழ்வார் என்ற வைணவரை அவர் வைணவர் அல்ல; சைவர் என்று போலியான வரலாறுகளைத் திணித்து கண்ணதாசனால் எழுதப்பட்டது இந்த நாவல். இப்படி எழுதுவதற்கு கண்ணதாசனைத் தூண்டியவரே சீனியர் சங்கராச்சாரிதான். அந்த நாவலுக்கு ‘சாகித்ய அகாடமி’ பரிசையும் சங்கராச்சாரியே சிபாரிசு செய்து பெற்றுத் தந்தார் என்று எழுதினார், கிருஷ்ணசாமி அய்யங்கார்.

பார்த்தசாரதி என்ற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர், ‘தீபம்’ என்ற இலக்கிய பத்திரிகையை நடத்தி வந்தார். 1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தின்போது கருப்புக் கொடி காட்டிய பார்ப்பனர் இவர். கண்ணதாசனின் ‘சேரமான் காதலி’யை சங்கராச்சாரி தொடர்ந்து விரும்பி படித்ததாகவும் அதை கண்ணதாசனிடமே அவர் கூறி மகிழ்ந்ததாகவும், ‘தீபம்’ பார்த்தசாரதி தனது பத்திரிகையில் எழுதினார். காஞ்சி மூத்த சங்கராச்சாரி வாரம்தோறும் தொடர்ந்து படித்த அந்த நாவல், காம உணர்வுகளை விரிவாக ‘காமரசம்’ சொட்ட எழுதப்பட்ட நாவல். உதாரணத்துக்கு அந்த நாவலின் ஒரு பகுதியை சுட்டிக் காட்டுகிறேன்.

> “குளிக்கும் அறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள் பத்மாவதி. அது ஒரு அழகான சலவைக் கல் மண்டபம். சுவர்கள் சலவைக் கல்லாலும் தரை கடப்பைக் கற்களாலும் கட்டப்பட்டிருந்தன. நடுவிலிருந்த தொட்டி முட்டை கலந்து சாந்து பூசி பளபளவென்று இருந்தது. எதிரே ஒரு பெரிய நிலைக் கண்ணாடி மாட்டப்பட்டிருந்தது.
>
> அவள் தன் ஆடையைக் களைந்து கொண்டிருக்கும்போது மெதுவாகத் தட்டினான் ரவிவர்மன். மெதுவாக “யாரது?” என்றாள் பத்மாவதி. “வேறு யார்?” என்றான் ரவிவர்மன்.
>
> “நான் குளிக்கிறேன்” என்றாள் அவள்.
>
> “நானும் குளிக்க வேண்டும்” என்றான் அவன்.
>
> “அய்யய்யோ! வேண்டாம்” என்றாள் அவள்.
>
> “நான் சத்தம் போட்டால் சகோதரிகளுக்குக் கேட்கும்; கதவைத் திற” என்றான் அவன்.
>
> மஞ்சள் ஆடையால் உடம்பைப் போர்த்தியபடி மெதுவாகக் கதவைத் திறந்துவிட்டு, சுவரில் மார்பைச் சாத்தியபடி நின்றாள் பத்மாவதி.
>
> உள்ளே நுழைந்த ரவிவர்மன் கதவைத் தாழிட்டான். அவள் தலைகுனிந்தபடி நாணத்துடன், ‘என்ன இது’ என்றாள்.
>
> “அல்லி மலர்கள் தண்ணீருக்குள் ஆடையில்லாமல் தான் நிற்கின்றன. ஆடை வாடையைத் தடுக்கவே, கணவனின் ஜாடையைத் தடுக்க அல்ல” என்றான் ரவிவர்மன்.
>
> “தயவுசெய்து போய்விடுங்கள்” எனக்கு வெட்கமாக இருக்கிறது என்றாள் அவள்.
>
> “தண்ணீருக்குள் விழும்போது குளிரத்தான் செய்யும், கொஞ்ச நேரம் போனால் அது சுகமாகவே ஆகிவிடும்” என்று அவள் ஆடையைப் பறித்தான் ரவிவர்மன்.
>
> தடுப்பவள் போல் தடுத்தாள்; ஆனால் தடுக்க முடியாதவள்போல் நடித்தாள்.
>
> ஓடிப்போய் அவள் தண்ணீர் தொட்டிக்குள் விழுந்தாள். இப்போது தண்ணீரே அவளது ஆடையாக ஆகிவிட்டது.
>
> “தண்ணீரைத் தொட்டுப் பார்த்த ரவிவர்மன், அய்யோ! கொதிக்கிறதே!” என்றான்.
>
> “உங்கள் கை குளிர்ந்திருக்கிறது” என்று அவள் சொன்னாள். அப்போது பெண்மை பலம் மிக்கதாகவும், ஆண்மை பலகீனமானதாகவும் காட்சியளித்தன.”

துறவி சங்கராச்சாரியை அதாவது பற்றற்ற சங்கராச்சாரியை கவர்ந்த சாகித்ய அகாடமி பரிசுக்குப் பரிந்துரை செய்ய வைத்த நாவல் இது. இது வைதிக வேத மரபுப்படி அமைந்திருக்கிறது என்று சங்கராச்சாரி பெருமைப்படும்போது ‘ஆண்டாளை’ தேவதாசி மரபு வழியில் வந்தவர் என்ற வரலாற்றைக் கூறினால் மட்டும் இவர்கள் ஏன் ஆகாயத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறார்கள்?

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# களப்பணியில் கழகத் தோழர்கள்

## தூத்துக்குடி மாணவர்களிடம் வரவேற்பைப் பெற்ற கழக துண்டறிக்கை

தூத்துக்குடி மாவட்ட மாணவர் கழகம் சார்பாக 21.02.2018 அன்று "மாணவர்களே! இருள் சூழ்ந்து நிற்கிறது, நமது எதிர்காலம்" எனும் தலைப்பில் தமிழக மாணவர்கள் எவ்வாறு இந்துத்துவ மோடி அரசால் பாதிக்கப்படுகிறார்கள், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப் பட்ட மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாமான அரசுப் பணிகள் எவ்வாறு பிறருக்கு தாரைவார்க்கப்படு கின்றன, நமக்கான வேலை வாய்ப்பு தேர்வுகளில் வெளி மாநில மாணவர்கள் பெரும்பான்மையாக பங்கெடுக்கும் அளவிற்கு கதவைத் திறந்து விட்டுருக்கிற பா.ஜ.க. எடுபிடி அரசான தமிழக அரசின் நய வஞ்சகத்தை துண்டறிக்கையாக தயார் செய்து அதை தூத்துக்குடியில் அமைந்துள்ள கல்லூரி மாணவர் களிடம் பரப்பி விழிப்புணர்வை உண்டாக்கும் முயற்சியில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு கல்லூரி மாணவர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. பல மாணவர்கள் இந்த துண்டறிக்கையை படித்துவிட்டு தங்களுக்குத் தோன்றிய சந்தேகங்களை தமிழ்நாடு மாணவர் கழக தூத்துக்குடி மாவட்ட தலைவர் கண்ணதாசன், மாவட்ட செயலாளர் பிரபாகரன் போன்றவர்களிடம் கேட்டு அறிந்த தோடு, சக மாணவர்களிடம் இந்த செய்தியை எடுத்துக் கூறுகிறோம் என்று சொல்லி தோழர்களின் அலைபேசி எண்களை வாங்கிச் சென்றனர்.

## விழுப்புரம் மாவட்ட கலந்தாய்வு கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்ட கலந்தாய்வு கூட்டம் விழுப்புரம் மாவட்ட கடுவனூர் கிராமத்தில் 11-02-2017 அன்று நடத்தப் பட்டது. கூட்டத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர். மா.குப்புசாமி தலைமை வகித்தார்.

கடந்த 2017 மே 21 முதல் 11-02-2018 வரை இயக்கம் சார்பாக மாவட்ட அளவில் நடத்தப்பட்ட செயல் பாடுகள் குறித்தும் - போராட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ மற்றும் ‘நிமிர்வோம்’ சந்தா சேர்பது சார்பாகவும் பேசப்பட்டன. வருகின்ற ஏப்ரல் 14- அன்று அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டும் நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் பிறந்த நாள் நினைவாகவும் கழம் சார்பாக பொதுக்கூட்டம் நடத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.மே மாதத்தில் விழுப்புரம் மாவட்டத்தின் சில பகுதிகளில் ஒரு வார அளவில் தமிழகத்தின் தனித்தன்மையை காப்போம் என்ற தலைப்பில் பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

## வடசென்னை மாவட்ட கலந்துரையாடல்

வடசென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் 25.02.2018 அன்று மாலை 6 மணியளவில் பெரம்பூரில் நடை பெற்றது. கூட்டத்திற்கு வடசென்னை மாவட்ட செயலாளர் இரா. செந்தில் குமார் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் ஏசு குமார் முன்னிலை வகிக்க, நா.பாஸ்கர், நாகேந்திரன் , ராஜீ, சங்கீதா, சங்கவி , தினேஷ், இரமேசு, பிரசாந்த், மோகன்ராஜ், சதிசு, சரவணன், தீபக், இளவரசன், சாரதி, செல்வம் என அனைத்துத் தோழர்களும் கலந்து கொண்டு கருத்துகளைத் தெரிவித்தனர்.ஏப்ரலில் டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் பொதுக்கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

டாக்டர் அம்பேத்கரின் இட ஒதுக்கீடு சட்டங்களால் கிடைத்த பலன்களை சிறு நூலாக பத்தாயிரம் பிரதிகள் தயாரித்து மக்களிடமும் கல்லூரி மாணவர்களிடமும் பிரச்சாரமாக கொண்டு சேர்ப்பதென முடிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக வட சென்னையில் தெருமுனைக் கூட்டங்கள், கருத்தரங்குகள், பரப்புரைப் பயணம் நடத்துவதென முடிவு செய்யப் பட்டது. நா. பாஸ்கர் நன்றி கூறினார் .

## மார்ச் 12இல் பெரியாரிய பெண்கள் மாநாடு–திருப்பூர்

2018க்கான திருப்பூர் திவிக செயல் திட்டம் குறித்து விவாதிக்க மாவட்ட கலந்துரையாடல் வீரபாண்டி பெரியார் படிப்பகத்தில் 11/2/2018 மாலை 5 மணிக்கு மாநகர் அமைப் பாளர் முத்து தலைமையில் நடந்தது. நிகழ்வில் கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, மாவட்ட செயலாளர் நீதிராசன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி உள்ளிட்ட 15 தோழர்கள் கலந்து கொண்டனர்

கழக செயல்பாடுகளை 2018 ஆம் வருடம் மக்களிடம் எவ்வாறு எடுத்து செல்வது, தமிழ்நாடு மாணவர் கழகம் கட்டமைப்பை வலுப்படுத்துவது போன்ற செயல் திட்டங்கள் வகுக்கப் பட்டன.

கருணாநிதி 10 இளைஞர்களுக்கு பறையடிக்கப் பயிற்சித் தர முன் வந்தார்.

மார்ச்12இல் பெரியாரிய பெண்கள் மாநாடு சிறப்புடன் நடந்தேற ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டது. இராயபுரத்தில் சிறப்பாக மாநாட்டை நடத்துவது எனவும் பெரியார்சிலை முதல் மாநாட்டு திடல் வரை அணிவகுப்பு ஊர்வலம் செல்லவும் முடிவெடுக்கப்பட்டது. தோழர் பார்வதி நன்றியுரையுடன் 7:30 மணிக்கு கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது.

## சென்னையில் காதலர் தினம்

உலக காதலர் தினமான 14.02.2018 அன்று இந்து மக்கள் கட்சி அமைப்பினர் காதலர் தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து காதலர் தினத்தை கொண்டாடக் கூடாது என சென்னை கடற்கரையில் ஆர்ப்பாட்டங்களை நடத்த இருப்பதாக இருந்த அறிவிப்பையடுத்து, சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் இரண்யா, பகுத்தறிவாளன், யுவராஜ், பிரபாகரன், காவை கனி, மா.தேன்ராஜ் போன்றோர் சென்னை பெசன்ட்நகர் கடற்கரையில் காதலர்களுக்கு சாக்லெட், துண்டறிக்கை வழங்கி காதலர் தினத்தை வரவேற்றனர்.

## கோவையில் கழக சார்பில் மார்ச் 18இல் பாரூக் நினைவேந்தல்

கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் பிப்.11 அன்று தோழர் கலை அலுவலகத்தில் நடைபெற்றது. மதவெறிக்கு பலியான ஃபாரூக் நினைவு நாளை மார்ச் 18 அன்று காலை பாரூக் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் வீரவணக்கம் செலுத்தி, அன்று கருத்தரங்கமும் குருதிக் கொடையும் வழங்க முடிவு செய்யப்பட்டது. திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் முகில்ராசு, விஜயக்குமார் (இணைய தள பொறுப்பாளர்), ரகுபதி, ஸ்டாலின், ராஜா, திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் முத்து, மாநகர அமைப்பாளர் ஜெயந்த், விஜயகுமார், உசேன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## சுகாதாரக் கேடு: மயிலைப் பகுதி தோழர்கள் புகார் மனு

சென்னை மயிலாப்பூர் குடிசை மாற்று வாரியம் பகுதி பிள்ளையார் தெருவில் பல மாதங்களாக சாக்கடை நீர் வெளியேறி பகுதி மக்களுக்கு சுகாதார சீர்கேடு, பல்வேறு நோய்கள் போன்றவைகளுக்கு அவதிக்குள்ளாகி வருகிறது. இந்த அடிப்படை பிரச்சனையை உடனடியாக தீர்வு காண கோரி தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய செயற் பொறியாளரிடம் 05.02.2018 அன்று மயிலாப்பூர் பகுதி தலைவர் இராவணன் மயிலாப்பூர் தோழர்களுடன் கோரிக்கை மனுவை அளித்தார். உடனடி தீர்வு காணா விடில் பகுதி மக்களுடன் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினர்.

## தலைமைக் கழகத்தில் ஜாதி – தாலி மறுப்பு மணவிழா

சென்னை திராவிடர் விடுதலைக் கழக தலைமை நிலையத்தில் 26.2.2018 பகல் 12 மணியளவில் ஜாதி-தாலி மறுப்பு வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்புடன் நடைபெற்றது. சென்னை எம்.கணேசன்-மீனாட்சி ஆகியோரின் மகன் ஜி. இராமகிருஷ்ணன், சென்னை சைதாப்பேட்டை ஜே.ஏ.பார்த்திபன்-ஜூலி ஆகியோரின் மகள் பி.நிவேதா ஆகியோரின் மணவிழாவை உறுதி ஏற்புக் கூறி பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நடத்தி வைத்தார்.

தென்சென்னை மாவட்டக் கழகத் தலைவர் வேழவேந்தன், செயலாளர் இரா. உமாபதி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார், வடசென்னை மாவட்டச் செயலாளர் செந்தில், உள்ளிட்ட தோழர்களும் நண்பர்களும் திரண்டிருந்தனர். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது.

## சென்னை கருத்தரங்க உரை: குறுந்தகடு தயார்!

30.1.18 அன்று சென்னையில் கழகம் நடத்திய ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சுந்தரவள்ளி, ஆய்வாளர் வாலாஜா வல்லவன் ஆற்றிய உரை – குறுந்தகடாக தயாராகியுள்ளது.

**நன்கொடை : ரூ.100**

**தொடர்புக்கு : 72992 30363 / 98414 89896**

## கொளத்தூர் படிப்பகத்தில் பெண்கள் சந்திப்பு



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கொளத்தூர் படிப்பகத்தில் 24.2.2018 ஞாயிறு அன்று பெண்கள் சந்திப்பு காயத்ரி தலைமையில் நடந்தது. கொளத்தூர் மேட்டூர் நங்கவள்ளி காவலாண்டியூர் திருப்பூர் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண் டனர். கூட்டத்தில் சர்வதேச பெண்கள் தின வரலாறு குறித்தும் பெண்கள் தின விழா நடத்துவது குறித்தும் கலந்துரையாடப் பட்டது. இயக்கப் பணிகளில் பெண் களின் பங்களிப்பை அதிகரிப்பது குறித்தும் பேசப்பட்ட து தோழர்கள் சூரிய குமார் டைகர் பாலன் நங்கவள்ளி கிருஷ்ணன் கொளத்தூர் பரத் , ஆனந்த் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களைச் செய்தனர்.தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி கலந்து கொண்டார். தோழர்கள் அனிதா, சுதா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

## புரட்சிப் பெரியார் முழக்கம்; முக்கிய வேண்டுகோள்!

சந்தா முடிவடைந்த தோழர்களுக்கு இதழ் நிறுத்தப்பட்டுள்ளது. தோழர்கள் சந்தாக்களை புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

– நிர்வாகி

**98414 89896**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 1st March 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN